**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 26-12-2023**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-12-26 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-12-27 | 2023-12-28 | 2023-12-29 | 2023-12-30 | 2023-12-31 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 2.0 | 1.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 29.0 | 29.0 | 29.0 | 29.0 | 29.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 22.0 | 22.0 | 22.0 | 22.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 50 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12 | 14 | 12 | 14 | 12 |
| காற்றின் திசை (கோணம்) | 20 | 50 | 50 | 20 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 2 | 6 | 8 | 4 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

டிசம்பர் 29, 30 ஆகிய தேதிகளில் மிக லேசான மழைப்பொழிவு எதிர் பார்க்கலாம்; அதிகபட்ச வெப்பநிலை 29.0°C ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 22.0°C-23.0°C ஆகவும் இருக்கலாம்; காற்றின் ஈரப்பதம் 50-90% வரை எதிர்பார்க்கப்படுகிறது; காற்றின் வேகம் மணிக்கு 12.0-14.0 கி.மீ வரை இருக்கலாம்; காற்றின் திசை வடக்கு முதல் வட கிழக்கிலிருந்து வீசக்கூடும் .

### பொது ஆலோசனை:

31.12.2023 முதல் 06.01.2024 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு இயல்பை விட அதிகமாகவும் மற்றும் அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

### குறுஞ்செய்தி :

விவசாயிகளுக்கு பூச்சி/பூஞ்சாணக்கொல்லி மருந்துடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க அறிவுறுத்தப்படுகிறது.

### பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | சம்பா பட்ட நெற்பயிர்- பூ பூக்கும் பருவம் முதல் கதிர் முதிர்ச்சி பருவம் மற்றும் அறுவடை நிலை- நிலவும் வானிலை காரணமாக நெல் வயல்களில் பின்வரும் பூச்சி மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்-1.தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 2. இலை சுருட்டுப்புழு தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% SC 60 கிராம் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3.குலை நோய் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு மெட்டோமினோஸ்ட்ரோபின் 20 SC 200 மில்லி லிட்டர் வீதம் அல்லது அசோக்ஸிஸ்ட்ரோபின் 200 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 4. நெற்பழம் அல்லது மஞ்சள் கரிப்பூட்டை நோய் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ப்ரோபிகோனாசால் 25 EC @ 200 மி.லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அல்லது 50% பூ பூக்கும் தருணம் மற்றும் தண்டு உருள் கதிர் வரும் பருவத்தில் ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைட் 77 WP @ 500 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| நெல் | நவரை பட்ட நெற்பயிர்- நாற்றங்கால் முதல் நடவு நிலை- 1.விதை நேர்த்தி- உயிர் உரங்கள் கொண்டு விதைநேர்த்தி செய்தல்: ஹெக்டருக்கு உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், அசிட்டோபேக்டர் மற்றும் சூடோமோனாஸ் 60-70 கிலோ விதைக்கு 1.25 கிலோ கிராம் வீதம் ஆகியவற்றை முதலில் அரிசி கஞ்சியில் கலக்க வேண்டும். நல்ல சுத்தமான தரையில் முளைகட்டிய விதைகளை பரப்பி, பின் உயிர் உர கூழ்மத்தை சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். விதைப்பதற்கு முன் விதைகளை நிழலில் 30 நிமிடங்கள் உலர்த்தி விதைக்க வேண்டும். விதைகளை நல்ல பிரகாசமான சூரிய ஒளியில் அரை மணி நேரம் உலர வைத்து பின் விதைப்பதால், முளைப்பு திறன் மற்றும் நாற்றுகளின் வீரியம் அதிகரிக்கும்; 2. இலைப்பேன்- நாற்றங்கால் (20 சென்ட்) தியாமெதோக்ஸாம் 25% WG 4 கிராம் என்ற வீதம் 40 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும். |
| நிலக்கடலை | நிலக்கடலை- விதை நேர்த்தி- 1. I).விதைப்பிற்கு முன் ஒரு கிலோ விதைக்கு டிரைகோடெர்மா விரிடி 4 கிராம் வீதம் அல்லது விதைப்பிற்கு முன் ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் ஃப்ளுரெஸ்சென்ஸ் 10 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம்; II). ஹேக்டருக்கு TNAU-14 ரைசோபியம் 125 மில்லி லிட்டர் மற்றும் பாஸ்போபாக்டீரியா 125 மில்லி லிட்டர் கலந்து விதை நேர்த்தி செய்து பின் விதைகளை 30 நிமிடம் உலர் நிழலில் வைத்து உலர்த்தி பின் விதைப்பை மேற்கொள்ளலாம்; இது உயிர் உரங்களுடன் கலக்க ஏதுவானது. இவ்வாறு நேர்ததி செய்யப்பட்ட விதைகளை பூஞ்சாணக் கொல்லிகளுடன் கலக்கக்கூடாது. |
| நிலக்கடலை | பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்திலுள்ள நிலக்கடலை பயிரில் பூ பிடிக்கும் திறன் அதிகரிக்கவும், பொக்கு கடலைகள் குறையவும், விளைச்சல் 15 சதம் வரை கூட, ஊட்டச்சத்து இழப்பை சரி செய்ய ஏக்கருக்கு 2 கிலோ TNAU நிலக்கடலை ரிச் 200 லிட்டர் தண்ணீரில் தேவையானளவு ஒட்டும் திரவம் கலந்து இலை வழித்தெளிப்பாக தெளிக்க வேண்டும். |
| உளுந்து | பூக்கும் பருவத்திலுள்ள உளுந்து பயிரில் பூ உதிர்தலை தடுக்கவும், மகசூல் அதிகரிக்கவும், ஊட்டச்சத்து இழப்பை சரி செய்யவும் ஏக்கருக்கு 2 கிலோ TNAU பயிறு ஒன்டரை 200 லிட்டர் தண்ணீரில் தேவையானளவு ஒட்டும் திரவம் கலந்து இலை வழித்தெளிப்பாக தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | மிளகாய்- நாற்றங்கால் முதல் நடவு நிலை- நிலவும் வானிலை காரணமாக மிளகாய் பயிர்களில் இலைப்பேன் தாக்கம் காணப்பட்டால் கட்டுப்படுத்த இமிடகிலோபிரிட் 17.8% SL 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் வீதம் அல்லது பைப்ரோனில் 5% SC 0.6 1 லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| கத்திரிக்காய் | நிலவும் வானிலை காரணமாக கத்தரி பயிர்களில் பின்வரும் பூச்சி மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்; 1.காய்த் துளைப்பான் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது டைமெத்தோயேட் 30 % EC 10 லிட்டர் தண்ணீருக்கு 7 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்; 2.சிற்றிலை அல்லது சிறு இலை நோய் கட்டுப்படுத்த டைமெத்தோயேட் 30 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர் என்ற வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மேலும் நோய் தாக்கப்பட்ட இலையினை அகற்றி விடலாம். |